786

பிஸ்மில்லாஹிர் றஹ்மானி

இஃது

ஹஜரத் நாகூர் சாகுல் ஹமீது

ஆண்டவர்கள் மீது பாடிய

# பதானந்தமஞ்சரி.

## முதற்பாகம்

இவை

இராமேஸ்வரம்

இ. கா.

அப்துல் ஹமீது இராவுத்தர்

அவர்களால்

பாடப்பெற்று,

ஹிஜ்ரி 1351-ஹு ரபியுல்லவ்வல்மீ 27உ

மதுராம்பிகா பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1932.

]    [விலை அணா 4

7:.417
N32
49800

# முன்னறிவிப்பு.

தரங்க வாரிதி சூழ்ந்திரா நின்ற இப்பிரபஞ்சத்தின்கண்
சஞ்சரிக்கும் மனுஷகோடிகளின் மனதைத் திடுக்கிடச் செய்யும்
காரணீகங்களோடு நிர்கையில் எழுந்தருளிய சாகுல்ஹமீதுமீரான்
சாகிபு ஆண்டவர்கள் மீதில் தனிப்பாடற்றிரட்டுகள் பெரும்
பாலும் நமது தமிழ் நாட்டின்கண் வெளிவராத குறையை நிவர்த்
திக்கும்பொருட்டு ஷை ஒலியவர்கள் ஜீவந்தராயிருந்த போதும்
தேகவியோகமாகி சமாதியானதின் பின்னரும் இவ்வுலகிற்கு
நடாத்திக் காண்பித்த காரணுதீதங்களில் சிலதை ஆராய்ந்
தெடுத்து தற்கால நாகரீக நூதன பலவர்ண மெட்டுகளில் பாடி
பதானந்தமஞ்சரி யெனும் நாமகரணஞ்சூடி இன்னூலை வெளியிட
லானேன். ஆகையால் சகலமான கனதனவான்களும் இ
அங்கீகரித்து இதுபோன்ற் இன்னும் பல நூற்களை வெளியி
மாறு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டுமாறு அதிகத் தாழ்
மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,

இ. கா. அப்துல்ஹமீது இராவுத்தர்,

இராமேஸ்வரம்.

786

பிஸ்மில்லாஹிற் றகுமானிற் றஹீம்.

காப்பு வெண்பா.

சீதங்குடை நிழற்றும் திருநபியின் செல்வப் பேரர்
நீதம் பொருந்தும் நாகை நிருபர் சாகுல் ஹமீதை—நினைதையினால்
எல்லாரும் போற்றி ஏக பயன் பெறவே
அல்லாஹுத்த ஆலாவே காப்பு.

---

# ஹக்கு சுபுஹானஹுவத் ஆலாமீதிற் பாடிய பதங்கள்.

ஆளு வீர் நபி என்ற வர்ணமெட்டு.

1\. பல்லவி.

இலாயிலாஹ இல்லல்லா எங்கும்
இரணம் கொடுத்திடும்—யா அல்லா

அநுபல்லவி.

மலாயிகத்து என்றபெரு மதிப்புள்ள வானவரை
மறைந்திருந்து ஏவல் வாங்கும் மன்னவனே யாகுதாயே
மாசிலாத வித்தைனே உன்னை
மறந்திடாது போற்றினேனே
அல்லா அல்லா அல்லா அல்லா (இலா)

தொஹைறயரு.

ஆண்பெண் அலியென்றும் அளவிட முடியாத
அரூபியும் நீயல்லவா
ஆணவம் கொண்டபெரும் அரசர்களை ஒடியிலே
அடக்கி யரசாள் வல்லவா

சரணம்.

ஆதத்தை மண்ணால் படைத்தாய் ஆதத்தின் விலா யெலும்பால்
அவ்வா தனைப் படைத்து அரியசொர்க்க லோகத்திலே
அருமையாய்க் குடியேற்றியே பின்னால்
அவர்களைப் பூவில் மாற்றிய
அல்லா அல்லா அல்லா அல்லா (இலா)

AUG 193

149800

தொஹையரு.

சித்தும் நீ வித்தும் நீ சத்தம் நீ சுகந்தம் நீ
சிறந்த முச்சுடரும் நீயே
சப்தம் நீ சாளி நீ முத்தும் நீ ரத்தம் நீ
சருவாதிகாரி நீயே.

பாட்டு.

ஆண்டவனுனே யென்று ஆண்ட நம் றாதவனை
அனுப்பியே கொசுகுதன்னை அவனுயிர் தனைமடித்த
ஆதியாகிய நாயனே உன்னை
அண்டினேனே சகாயனே
அல்லா அல்லா அல்லா அல்லா (இலா)

தொகையரு.

கடலும்நீ திடலும்நீ காற்றும்நீ காசினி
காரணக் கடவுணீயே
அடலும்நீ அறிவும்நீ அன்னம்நீ சொன்னம்நீ
அனுதினமும் காப்போன் நீயே

பாட்டு.

அன்னை வயிற்றில் வைத்து அன்ன ஆகாரம் தந்து
என்னை ரெக்ஷித்து வந்த ஏகாந்த மானவனே
ஏழைகள்பா லிருப்பவனே கவி
இயம்பும் அப்துல் ஹமீதின் கோனே
அல்லா அல்லா அல்லா அல்லா (இலா)

---

காலங் கலி காலம் என்ற வர்ண மெட்டு.

2. பல்லவி.

ஆதிபராபரனே அஹதானவனே
அண்டினேனுன்னை அர்வமானவனே

அநுபல்லவி.

அனவரதமும் எனதிருதய
மனதிலே மிகபயந்து தொழுதேன் (ஆதி).

சரணம்.

முச்சுடரி லிருப்பவனே முதல்வ னானவனே
முந்திமுதல் பெரியவனே மோனவாருகனே
முழிப்புறக்கமும் அழிவு சனனம்
செழிப்பிரை யின்பமொழிந் திருந்திடும் (ஆதி)

தாய்தந்தை யில்லாதவனே தனவந்தனே
தாசர்களை ரெக்ஷிப்போனே சர்வவல்லவனே
தரணியுயிரை இரணங்கொடுத்து
சரிவர ஆட்சி புரிந்திடும் வல்ல (ஆதி)

144800

எட்டிலடங் காதவனே ஏகனே பரனே
ஏழைகளுக் குதவுவோனே ஏகாந்த பவனே
எடுத்திசை கவி கொடுத்துப் பாடிடும்
அடிமை யப்துல் ஹமீதின் மிடிமை யகற்றிடும் (ஆதி)

---

மோகமாகி வந்தேன் என்ற மெட்டு.

3. பல்லவி.

ஜீவகோடி யாவும் போற்றும்
தேவனே ஜெகநாதா (ஜீவ)

அநுபல்லவி.

தேவனே ஜெகநாதா தேவனே ஜெகநாதா
காவா வா வி னோதா (ஜீவ)

சரணம்.

சர்வலோக சம்ரக்ஷகா
சனன சா வில்லாத
அர்வ பரம் பொருளே அர்வ பரப்பொருளே
அழிவில்லாப் பிரமாதா (ஜீவ)

துறந்தவர்க ளிதயத்திலும்
திரும்பி யுறைவோனே
சிறந்தபெரும் முதல்வா சிறந்தபெரும் முதல்வா
சிதந்தரும் றகுமானே (ஜீவ)

அண்டினோர் தமை ரக்ஷிக்கும்
அற்புத விலாசா
கண்டிடா மெய்யொளியே கண்டிடா மெய்யொளியே
ககனமீதில் வாசா (ஜீவ)

இன்பதுன்பம் யாவுமின்றி
இருக்கும் தனவானே
அன்பாரிறைவோனே அன்பாரிறைவோனே
அனங்க றகுமானே (ஜீவ)

பஞ்சபாதக நெஞ்ச வஞ்ச னப்துல்ஹமீது
வஞ்சனப்துல் ஹமீது
வஞ்சனப்துல் ஹமீது
வந்தித்தேனு னிப்போது ஜீவகோடி யாவும் போற்றும்

---

பாரோர் தினம் புகழ் என்ற மெட்டு.

4. பல்லவி.

ஆதிபரம்பொரு ளாகிவிளங்கிடும்
ஆனந்தமானவனே எ (ஆதிபரம்)

அநுபல்லவி.

சோதியுந்தனை நான் தோத்திரம் செய்கிறேன்
சொற்கப்பதிக் கிறைமியா னே (ஆதி)

சரணம்.

தாயும்பிதாவும் தமயனினை துணை
சற்றுமில்லா திருப்போனே
காயும் கதிர்மதி கந்தர வான்கடல்
காசினியும் படைத்தோனே (ஆதி)

பெருமையடிக்கும் பெரியவம்பர்களை
பெலனைக்குறைக்கும் வல்லோனே
தரும அறநெறி தப்பிடாத தொண்ட
தாசர்களை ரக்ஷிப்போனே (ஆதி)

ராவும் பகலும் ரகசியமாகவே
ராஜரீகம் புரிவோனே
பூவும் மணமும் உயிரும் உடலும்
பொருந்தச் செய்த பெருமானே (ஆதி)

நாளைமகிஷரில் நாச மைதானத்தில்
நியாயங்கேட்கும் தனவானே
நன்மை தீமைக்கேற்ற தண்டனை கொடுக்கும்
நாகரீக இறை யோ னே (ஆதிபாம்)

முப்புவியோர்க்கும் முழுமிரணமீயும்
முன்னவனே இறை யோ னே
அப்துல் ஹமீதின் அமிர்தக்கவிக்கு
அருள் செய்திடும் றகு மா னே (ஆதி)

---

ஆகாது உனை நம்பி என்ற வர்ணமெட்டு.

5. பல்லவி

எங்கும் நிறைந்திருக்கும் தானவா
ஏகனானவா
ஈகையானவா இந்த
ஏழையைக் காக்கும் முதலானவா (எங்கும்)

சோதியாய் நின்றுலாவும் தூயவா
சோபித மாய்வா
சொற்கக் கைலாயவா உனை
தோத்தரித்தேன் காத்திடு சகாயவா (எங்கும்)

களவுசெய்யத் தந்திரம் சொல்லிக்கொடுப்பவா
காட்டிக்கொடுப்பவா
கூட்டிப்பிடிப்பவா ஜெயில்
காராகாரத்தி லடைத்துப் பின்னால் விடுப்பவா (எங்கும்)

மாயனிபுலீசினிடம் கூட்டாதே
மறத்தில் தாட்டாதே
மகிழ்வை யோட்டாதே நஞ்ச
மாசுணம் கௌசிகன்போ லாட்டாதே (எங்கும்)

காதகக்கசடருடன் சேர்க்காதே
கர்மத்தைக் கோர்க்காதே
களிப்பை நீக்காதே பைபல்
கவலைப்பட விளையாட்டாய்ப் பார்க்காதே (எங்)

வறுமையால் வருந்தி வாடச் செய்யாதே
வல்லவா செயயாதே
வாதைக்குள் வையாதே வைத்தால்
வாஸ்தவமாய் எந்தனுடல் உய்யாதே (எங்)

சேடனப்துல் ஹமீது சொல் தள்ளாதே
சேதித்துத் தள்ளாதே
சினந்து கொள்ளாதே கவி
செப்பிட நாவிலிரு துள்ளாதே (எங்)

---

# ஹஜரத்
# சாகுல் ஹமீதொலி
## ஆண்டவர்கள் மீதிற் பாடிய பதங்கள்.

6. சுருளி மலைமீதில் மேவும் என்ற வர்ணமெட்டு.

நாகூர்தனில் வாழும் காதர்மீரா உமை
நம்பினேன் சரணபயம் தாராய் செல்வ
நானிலந் தனில் சிறந்த
மாணிக்கப் பூரில்பிறந்த
நாதா நவ நீதா (நாகூர்)

தஞ்சைநகர் ராஜன் திருப்பிணியை நீக்கி
தரணியில் கீர்த்தி பெற்ற மணியே இந்த
பஞ்சமாப் பாதகன் மனச்
சஞ்சல மகற்றிடுவீர்
பணியே செல்வ கனியே (நாகூர்)

இந்துதேச காவலா கெப்பீரா அந்தோ
என்னசொல்வேன் மாக்ஷிமைஒப்யாரா விந்தை
சந்தத நாலா வர்ணத்தார்
சிந்தையில் நினைந்து தொழும்
சீரா சுகு மாரா (நாகூர்)

மங்கையின் மதன ஸ்தனபாரம் தனை
மாற்றியழைப் பித்தோரே விஸ்தாரம் அலை
பொங்குகடல் சூழுலக
மெங்கினும்புகழடைந்த
புண்யா காருண் யா (நாகூர்)
கல்வியறி வில்லாத உன்தாசன் அப்துல்
ஹமீதென்னும் கவி விசுவாசன் திவ்விய
கான கீதமே பாடினேன்
தீனவர் தினம் புகழும்
கோவே மகிழ் தாவே (நாகூர்)

---

8. கந்தா காருண்யனே என்ற வர்ணமெட்டு.

பல்லவி

நாகூர் ஆண்டவரே நம்பினேன் ஆள்வீரே

அனுபல்லவி

நம்பினேன் ஆள்வீரே இன்புறச் செய்வீரே

கஜல்

மோகமிஞ்சிடும் யோகம் தங்கிடும்
நாகை மீதினில் வாழ்வோரே
ஈகைதங்கிய இதயங் கொஞ்சமும்
இரங்காதென்னவோ சொல்வீரே

பாட்டு

இரசூல் நபி பேரரே இன்ப அதிகாரரே
ஆரசே திவ்யகுண அறிவாகரரே

கஜல்

தஞ்சமென்றே கெஞ்சி நின்றேன்
அஞ்சிடா யென்றுதரி
கொஞ்சம் தணை வந்து எந்தன்
பஞ்சை யாவும் தீரும் நீர்

பாட்டு.

ஆகாத வர்மமே அண்ணலே சொன்னமே
ஓ கோ தயவுபுரி உமைப் போற்றினேனே (நாகூர்)

கஜல்.

உம்மை நன்று அண்ணலென்று
தன்மையாய் மன்றாடினேன்
எம்மை அன்றும் இன்னல்முற்றும்
கண்டிப்பீர் கொண்டாடினேன்

பாட்டு.

ஏழையடிமை என்னை ஈடேற்றம் செய்யுமே
ஏனோ தாமதமே எங்கள் நாயகமே (நாகூர்)

கஜல்.

தப்பமென்று அம்புவியில்
நம்பி நித்தம் தேடினேன்
அன்பன் அப்துல் ஹமீதுசொல்
இன்ப கீதம் பாடினேன

பாட்டு.

வாரும் ஹமீதொலியே வள்ளலே மதியே
காரும் குதுபொலியே கருணை நிதியே (நாகூர்)

---

8. ஆசை நேசா என்ற வாணமெட்டு.

பல்லவி.

நாகைமேவும் யெங்கள் நல்லமீரா
நாயகமே இந்து ராக்ஷிப பா ரா (நாகை)

அநுபல்லவி.

ஏகனருள் பொங்கிடும் இன்பவீரா
ஏழையென்னைத் ததிவந்து காராய் (நாகை)

சரணம்.

தஞ்சைராஜன் வருந்திநொந்த நோவை
தன்னை நீக்கி வைத்த கற்ப காவே
நெஞ்சமஞ்சும் கொடியமலைத் தேவை
நெருக்கியே கூசிலடைத்த கோவே (நாகை)

எந்தராஜரும் வந்து போற்றும் மேரே
இன்னல் நீக்கியாளும் மனைனர் சீரே
சிந்தில்சேத மானதோர் வங்கம் நீரே
சில்லைக்கொண்டடைத்து ரக்ஷித்தோரே (நாகை)

அன்னையர் வயிற்றிலிருந்து தானே
அமிர்தவசன முரைத்த கோனே
பொன்னடி இரண்டையும் பணிந்து யானே
போற்றியே புகழ் செய்கிறேனே (நாகை)

வீரரான ஹசன் குத்தூசின் பாலா
விபரீத ஞான குண தயாளா
பார தூர கரண பண்பு மேலா
பைபலப்துல் ஹமீது பாடும் சீலா (நாகை)

---

9. நொண்டிச்சிந்து.

கன்ஜசவாய் காகிரொலியே—என்றுதா
கவலையசற்ற வந்த கா ணீகமே

தஞ்சமென்று பாதகதியே—என்னுதா
தாட்சியுடனே பணிந்தேன் காரும் நிதியே
மன்னரசன் குத்தூசின் பாலரே—என்னுதா
மாட்சிமை மிகுந்த. மாந்தர் கனுகூலரே
கன்மவினை நீக்கும் லோலரே—என்னுதா
காசிம் முஸ்தபா பேரராய் வந்த சீலரே
தஞ்சை நகராஜன் பிணியை—என்னுதா
தடுத்தகற்றி வைத்த எங்கள் கண்ணின்மணியே
கஞ்சகரம் தன்னிலணியே—என்னுதா
கனிகளைக் காண்பித்திட்ட பொன்னின் மணியே
ஏழைப் பிராமண மங்கையின்—என்னுதா
நேத்திரத்தை மீட்டிவைத்த கீர்த்தியொலியே
ஆழக்கடல் மீதில் செல்வோரை—என்னுதா
ஆபத்தில்லாமலே நித்தம் பாதுகாப்போரே
அந்தணனின் தென்னங் தருவை—என்னுதா
அழகுடன் தழைத்துக் காய்க்கச் செய்த குருவே
சுந்தர தன்மகன் கருவே—என்னுதா
சூட்சமாய் அமைத்தெடுத் துக்கொண்ட மருவே
நாகைப்பதி மீதில் வாசரே—என்னுதா
நாகரீகத் தேசமெல்லாம் போற்றும நேசரே
தேககந்த வாச போஷரே—என்னுதா
தேசிகரே சாகுல் ஹமீதென்னும் வாசரே
முப்புவி புகழும் வீரரே—என்னுதா
முன்னவனருள் மிகுந்து பொங்கும் தீரரே
அப்துல் ஹமீதுக்குபகாரரே—என்னுதா
அன்புவைத தருள்புரிவீர் அண்ணல் நீதரே

---

10. ஆலாயிலாவன என்ற வர்ணமெட்டு.

பல்லவி

நாகூர் மீரான் சாகிபே நம்பினேனே அனுதினம்

அநுபல்லவி.

ஏகனபி பேரரே எழில் வாய்ந்திடும் தீரரே
சோகமுழுதும் போக்கும் சோபிதரே ததியிது (நாகூர்)

பாத்திமா பாலா நேத்திர லோலா
தோத்திரம் செய்தேன் யோக ஞான சீலா (நாகூர்)

கிஸ்திதனை யழைத்த கிருபாக ராயுதித்த
கஷ்டிபகற்றுவீரே காரணரே ததியிது (நாகூர்)

# முதற்பாகம்.

9 | 44800

மன்னனும் கிட்டாதேச மகத்துவ தேசிகனை
பன்றி ரூபமாய்ச் செய்த பாக்கியரே பதம்பெற (நாகூர்)
தாசனப்துல் ஹமீது தமிழுக்கருளிப்போது
பாசமுடனே தந்து பாதுகாரும் கதிபெற (நாகூர்)

---

## 11. பாலாபிஷேகப் பழனிமலை என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

நாகைப்பதி மேவும் நாயகமே யுங்கள்
நளின மலரடி நாடி வந்தேன (நா)

அநுபல்லவி.

எகனருள் பொங்கும் இரசூல் நபி போரா
ஏழையடிமையைக் காத்தருள் வாய் (நா)

தொகையறா.

யோக தி போகா விவேகா தியாக ராஜா
போகாதி மோகா வீவாகாதீ பாவநாசா (நா)

பாட்டு.

நயவருள் நிறைதிரு நளினகண் பாராய்
நசல்பிடி முழுதையும் நசுக்கியே தீராய்
நாதா நவநீதா தாதா தவ போதா
நம்பி புகழ்ந்திட்டேன் அப்புவி யில் (நா)

தொகையறா.

தீர விஸ்தார வொய்யார கெம்பீரா
வீர உத்தார சிங்காரா அலங்காரா (நா)

பாட்டு

விதிமுறை தெரிந்திடா விபரீத மூடன்
விளையபின்னனப்துல் ஹமீதெனும் சிறு சேடன்
வீரா மகா சூரா மேரா அருள் தாராய்
விந்தை யலங்கிர்த சுந்தரரே (நா)

Q7:417 N22

---

## 12. ஐயா மதினா நகர்க்கோடுனே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

அண்டர்பணி சாகுல் ஹமீதா எனை
ஆண்டருள் புரிந்திடு நாதா (அண்)

அநுபல்லவி.

வண்டார் வனசமலர் பாதா இந்த
வறியன் மனமகிழ வரம்தரு மேதா (அண்)

சரணம்.

ஆபாசமான ஸ்தனபாரம் தனை
அகற்றி பழைத் தோரே விஸ் தாரம்
சோபிதமான சதுர்க்தாரம் கம்பம்
சொகுசுட னளித்த சுல்த்தானே கெம்பீரம் (அண்)
அய்யா கவலையது கொண்டு உங்கள்
அபயமென் றுழல்கின்றேன் நின்று
துய்யா துயர் முழுதும் தூண்டு துண்டாய்
துணித்து அஞ்சாதே யென்று கூறிடும் நன்று (அண்)
கல்லா யிருப்பா சருப்பிலையா மனம்
கரைந்தெவ்வளவோ செய்தீ ரில்லையா
அலலாவே யெந்தன் துயர்பலையா உமக்கு
அருவருப்பென்ன சொந்த அடிமைநானில்லையா (அண்)
கொஞ்சம் தயவுசெய்து நேசி என்னைக்
கொளுகும் குறையகற்றி வீசி
அஞ்சாதே என்று விசுவாசி பாடும்
அடிமையப்துலஹமீதை அனுதினம் போஷி (அண்)

---

13 மாது வாணி பாதம் என்ற வர்ணமெட்டு.

பல்லவி

ஜீவ காருண்ய மீரா ஒலி
சீதேவியே கண் பாராய் (ஜீவ)

அநுபல்லவி.

காவலர் புகழும் மேரா உபர்
கந்தச சந்தன பாவ லணிந்திடும்
விந்தை மிகுந்திடும் சுந்தர சம்பிரம (ஜீவ)

சரணம்.

பார்ப்பனீக மாது சண்
பார்வை நீக்கிப் போகு
மாப்புச் செய்து தீது தனை
மாற்றிய விதாண ஏற்ற மிகுந்திடு
கீர்த்தி சிறந்திடும் நேத்திரே யெங்கள் (ஜீவ)
பச்சைக் கிராம்பழைத் கோரே படு
பஞ்சம் நீக்கிய யேரே
ரக்ஷித் தெனையாள் வீரே
ரம்மியமடைந்திட கம்மியன் பிணி தனை
கண்டித் தொருநொடி துண்டித்த வள்ளலே (ஜீவ)
பாத்திமா தவ பா லா பரி
பாலன அனு கூலா
சாஸ்திரம் புகழ் நூலா
சந்ததமெந்தனை சிந்தை மகிழ்ந்திட
வந்தருள் செய்திடும் சன்ஜச வாயொலி (ஜீவ)

உபயபாதம் மேவி குறையை
உரைக்கலானேன் பாவி
அபயம் தாயெனைக் கூவி
அப்துல் ஹமீதின்று செப்பிடுஞ் செந்தமிழ்
தப்பிதமகற்றியே நட்புடன் அருள்புரி (ஜீவ)

---

14. நம்பி வந்தேன் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

கஞ்ச சவாய் காதிரொலியே
தஞ்சமெனவே நம்பினேன் கொஞ்சம் கயவு செய்திடும் (கஞ்ச)

அநுபல்லவி.

கஞ்சமதலை சதுர் அருளிய நேசா
கனசன மிண்டையுமறைத்த விலாசா
பஞ்சமகல மழையிறக்கிய பாசா
பழவினைகளைப் பஞ்சாய்ப் பறத்திடும் கந்த வாசா (கஞ்ச)

சரணம்.

சோர நாணயம் செய்து திருமலைச் செட்டி
தூக்கு தண்டனை யடைந்திட நொடி கெட்டி
தீரமுடனே பெருந் தடியினால் தட்டி
சிரதண்டனையை மாற்றிவைத்தேரே வாரீரோ கிட்டி (கஞ்ச)
சாபுமார்களின் மிசை கோபித்த நீலி
தரியாதன மிரண்டை சிவிகையில் ஞாலி
தீவிரயிரை செய்துவரும் செய்கு பாலில்
சிறையெறும் பனுப்பியே விரட்டித் தாத்தும் யாளி (கஞ்ச)
தெங்காசி நகர் தெய் வாலப மாட்டை
சேர்ந்து தபோதனர்கள் புசித்திட வேட்டை
சங்கமாய் வந்துபலர் கொடுவென சேஷ்டை
சடிதியில் எருததை எழுப்பிக் கொடுத்த மேஷ்டி (கஞ்ச)
தாசனப்துல் ஹமீது தமிழ்க்குப காரா
தனவந்த ரேழைமுதல் பரவும்ஓய் யாரா
தோஷமகற்றி சடபலம் தரும் மீரு
சோபனரே முரச முழங்கும் செல்வ நாகூரா (கஞ்ச)

---

15. அந்தரமேவிய என்ற வர்ணமெட்டு.

பல்லவி

சந்ததமுங்களின் செந்தாமரைப் பதம்
வந்தனம் செய்கிறேன் நாகூரா (சங்)

### அநுபல்லவி.

நாகூரா நபி பேரா
நசல்மிடிமுழுதையும்நசுக்கியே அனுதினம்பிசகறளனையாளாய் ()

### சரணம்.

முத்திலுதித்திடும் முஸ்தபா நன்னபி
புத்திரி பவுத்திர திருப்பேரா
திருப்பேரா சுகுமாரா
தினசரி மனத்துயர்களை நொடியகற்றிடு
சிறந்திடும் சாலூரா (சங்)

மைனிகன் வைத்திடும் வைப்பருள் செய்திடும்
ஐவனம் தங்கிய ஒலிநேசா
ஒலிநேசா பிரகாசா
ஒருக்காலும் மனதிலே மறக்காமல் துதித்திட்டேன்
உதவி வந்தருள் பாசா (சங்)

சந்தமிகுந்திடும் செங்கமிழ் செப்பினேன்
சொந்த அப்துல் ஹமீதெனும் தாசன்
எனும்தாசன் விசுவாசன்
இகபர மிரண்டிலும் சுகம்பெற கிருபைசெய்
விகசித மலர்ப்பாதா (சங்)

---

## 16. கமலாசனியே என்ற வர்ணமெட்டு.

### பல்லவி

சரணாகதி யடைந்தேன் சாகுல் ஹமீதே
சாகுல் ஹமீதே சாகுல் ஹமீதே இப்போதே (சரணா)

### அநுபல்லவி.

கருணாகரரே கடைக் கண்களால் பாராய்
கண்களால்பாராய் கண்களால்பாராய் நீர் சீராய் (சரணா)

### சரணம்.

கஞ்சபொற் பாதம் தாரும் சஞ்சலங்களைத் தீரும்
அஞ்சலி செய்தேனுமை ஆதரித்தாளாய்
ஆதரித்தாளாய் ஆதரித்தாளாய் தயாளா (சரணா)

பாரில் துணை வேறில்லை பாதுகாப் பாருமில்லை
கோரினேன் பாவினான் கோமள கீதா
கோமளகீதா கோமளகீதா சமேதா (சரணா)

சிந்தை கலங்கி மிக கொந்து வருந்துகிறேன்
மைந்தனப்துல் ஹமீதின் மா மகாராஜா
மா மகாராஜா மா மகாராஜா உல்லாசா (சரணா)

---

17. கந்தனே சரணம் என்ற மெட்டு.

பல்லவி.

வந்திடும் ததியே
வரிசை மீருன் சாஹி பொலியே (வங்)

அனுபல்லவி.

சந்ததமும் உம்மைநாடி
தாழ்ந்து வேண்டிமீனன் கொண்டாடி
சுந்தரா யென்மீதில் மோடி
செய்வ தென்றால் நன்றோ இன்று (வங்)

சரணம்.

ஆலகால விஷத்தை யுண்டவா
அழகு சித்திரகூடம் கண்டவா
கோலகால செயின் கை கொண்டவா
கோரி னேனே பாரில் நானே (வங்)

இந்துதேச ராக்ஷியபாரா
ஈகை யோக ராஜ கெம்பீரா
மைந்தன் துயர் தன்னைத் தீராய்
மாக்ஷி பெற காக்ஷி தர (வங்)

கர்மியன் வயிற்று நோவை
கடிதில் தீர்த்து வைத்த கோவே
செம்மலப்துல் ஹமீது பாவே
செப்பினேன் நட்புடன் வொப்புட னிப்போது (வங்)

---

18. திருவே ஞான என்ற வாணமெட்டு.

பல்லவி.

சகலஜாதி புகழும் புண்ய
சாஹுல் ஹமீ தொலியே
ஒலியே ஒலியே ஒலியே (சகல)

அநுபல்லவி.

மகரிகள் புடை மலிந்திடு னெடு
ஜெகம் புகழ் செய்கு அப்துல் காதரே
பிர்ம க்ஷத்ரிய வைசிய சூத்ர (சகல)

தொகையறு.

மாயப்பிர பஞ்சத்தில் நேயமூ வாசைகளை
ஓயாது மனதி லெண்ணி
காயங் கரைந் தழும் கசடனை ரக்ஷியும்
காதலோடு நண்ணி (சகல)

பாட்டு.

கனகயோக மாது தன்னை
கடின தண்டனை செய்தவா செய்தவா செய்தவா
கடிமலரணி அடிசிலையிரு
கொடி ரதந்தன்னை நொடி செலுத்திய
கிரீசு யூகர் பௌத்த சீக்கியர் (சகல)

தொகையறா.

ஆதாரம் உமையன்றி அவனியில் எனக்கொரு
ஆதரவு யாரு மில்லை
பாதாரம் தினந்தோறும் பற்றியே சிந்திக்கும்
பாலன்மேல் தயவேன் வல்லை

பாட்டு

பருமனான கொடிய ஜின்னை
சிறிய கூசிலடைத்தவர் அடைத்தவா அடைத்தவா
பௌத்திர மாணிக்கம் பட்டணமீதிலே
பய ஜல சாபம் பண்ணிய வள்ளலே
பாலனப்துல் ஹமீது செந்தமிழ் (சகல)

---

## 19. அமிர்த களஞ்சிய என்ற வர்ணமெட்டு.

பல்லவி

கவலைக்கடலிலேமூழ்கித் தயங்கிடும்
கசடனைக் காக்காத தென்ன தாமதம் (கவ)

அனுபல்லவி

குவலயம புகழும் நபியின் பௌத்திர
குறை முழுதும போக்க விரைவி லிறங்கியே
வாரும் என்முகம் பாரும் அடிமையைக் காரும் சடிதியில் (கவ)

சரணம்

படபடென ஒரப்ப சினந்த தேசிகனை
பாதுகையை யேவி நொறுக்கி யடக்கிய
திடுதிடென திரு வாரூர் ரதமதை
செலுத்தி யதிசயம் உலகில் பரத்திய
செம்மலே உங்கள் செபபொற் பாதத்தை தேடி ஓடினேன் (கவ)
அன்னை வயிற்றினி லிருக்கும் போதினிலே
அமிர்த வசனங்க ளுரைத்திடு ஒலியே
பொன்னடி சிர மேற்றிப் போற்றினேன்
புஜபல சுகுண புனித பிரபல
பேரின்பா எனைக்காரன்பாய்ப்பாடினேனப்துல் ஹமீது செந்தமிழ் (கவ)

---

20. நெஞ்சே நீ நாடுவாய் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பெண்ணே நீ நாடுவாய் உயர்
பெரியவ னருள்பெறும் துரைசாகுல் ஹமீதொலியை (பெ)

அநுபல்லவி.

கண்ணே யுனது மன விசாரமே எல்லாம்
கலைந்து ஓடும் வெகு தூரமே
திண்ணமாய் நம்பிடு ஆகாரமே தேக
திடசவுரியம் தந்து உதவுவா ரிந்நேரமே (பெ)

சரணம்.

பேய்பிணி முழு தையும் தீர்ப்பவர் ஒரு
பேதக மின்றியே கண் பார்ப்பவர்
தாயென வேண்டுவோரைக் காப்பவர்
தரணியவர்க் கெல்லாம வரங்களைக் கொடுப்பவர் (பெ)

கப்பலைக் கண்ணாடி யாலடைத்தவர் பச்சை
கந்த கராம்பு தனை யழைத்தவர்
முப்புவியோர் புகழ உதித்தவர் திரு
முகையதீன் ஒலி திருப் பேராக வந்தவர் (பெ)

மன்னரசன் குத் தூகின் பாலராம் மிக்க
மாகூடிமை தங்கு மனு கூலராம்
கன்னல் விளையும் நாகை வாசராம் அப்துல்
ஹமீதின் கவிதைக் கருளை கொடுக்கும் பிரகாசராம் (பெ)

---

21. வர்த்தகர் குலத்துதித்த மாரா என்ற வர்ண மெட்டு.

பல்லவி.

நாகைப்பதி மேவுங் காதிர் மீரா உமை
நம்பினேன சரணபயம் தாராய் (நா)

அநுபல்லவி.

சோகம் தரும்துயர் யாவும் தீராய் உண்மை
தோத்திரம் புரிகிறேன் கண் பாராய் (நா)

சரணம்.

சித்திர விநோத மலர்ப் பாதா செய்கு
செய்யிதப்துல் காதிரே விநோதா
உத்தம சற்குணரே சமேதா என்னை
உதவி புரிந் தாள வொண்ணாதா (நா)

கன்னியின் ஸ்தன மிரண்டை லேசாய் நீக்கி
கடிதில் வர வழைத்த நேசா
என்னை ரெட்சித் தாண்டிடும் விலாசா செல்வ
இந்துதேச மாளும் ராஜ போசா (நா)

கிட்டா ராஜா தேசிகனைத்தானே பெரும்
கேழல் ரூபமாய்ச் சமைத்த கோனே
அட்டதிக்கும் வாழ்த் திடும் சீமானே உம்மை
அண்டிவந்தேன் ஆண்டருள் பிரானே (நா)
செந்தமிழ் வழங்கும் பாண்டித்தேசன் ஏழை
சேடனப்துல் ஹமீ தெனும் தாசன்
பைந்தமிழ்உரை செய்தேன் இன்னீசன் யோகா
பாக்கியரே சம்ப்ரம பிரதாபா (நா)

---

22. காருமென்னை என்ற வர்ணமெட்டு.

பல்லவி

ஐபாவே தயை செய்யாதிருப்பது சரிதானு இது (ஐ)

அநுபல்லவி.

துய்யா உம் அடிமை யான்
துயரடைந் துழல்கிறேன்
பையலெனக் கிரங்கி நிதம்
பாதுகாரும் சொன்னேன் (ஐ)

சரணம்.

காதனபபச் சப்தம் காதில்விழ வில்லையா
கல்லாயிரும பாமனம் கரைந்திலை வில்லையா (ஐ)

இத்தனை நாளுங்கெட்ட இடரில் வருந்தவிட்டு
சித்தம்பொருந்திருப்ப தெனனசேதியறிகிலேனே (ஐ)

ஜீவகாருண்யா உங்கள் சித்தமிப்படி யாச்சா
சோபிதம் நிறைந்த நாகை சாகுல்ஹமீதே ஆஹா (ஐ)
சேடனப்துல் ஹமீதின் செந்தமிழை யிப்போது
பாடினேன் தயைசெய்து கண்பாரும் சாகுல்ஹமீதே (ஐ)

---

23. நம்பிக்கை கொண்டேல்லோரும் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பண்பு உலாவிடும் கண்மணிமீரான்
பக்திபாடுவோம் நய (பண்)

அநுபல்லவி.

பக்தி பாடுவோம் தினம் சித்தி தேடுவோம் நய (பண்)

சரணம்.

சாகுல் ஹமீதை யென ஓதி உன்
சஞ்சல முடன் பொங் தீது
சடிதியில் அடியொடு கொடியிலே மடிப்பவே சாபம் தப்பாது (ப)

தொகையறு.

வேலைபாலதிகலாபம் வேண்டிய தடையலாமே
வெற்பகை வற்புயாவும் விலகியே ஓடிப்போமே
சாலவேபுகழ்புகர சம்பதமும் பெருகுமாமே
சாதுரியகல்விஞானம் சாப்பிருகூஷியம் வளருமாமே

முடுகு

காதகபிணி பல சோகம் தொடர்
கடி விலகிடும் வெகு வேகம்
கற்பக ஹமீகௌலி பொற்பத சாபல்யம்
கண்காகூஷி யோகம்
கண்காகூஷி யோகம் அப்தல்
ஹமீது சொல் ராகம் நய (பண்)

---

24. யோகம் செய்திடவா என்ற வர்ணமெட்டு.

பல்லவி

ஆண்டருள் புரிவீர்
அண்ணல் சாகுல் ஹமீதொலியே (ஆ)

அநுபல்லவி

ஆதாரம் வுமையன்றி நாதா வேறில்லையே (ஆ)

சரணம்.

மகிமைப்ரதாபமே மணிச்சுடர் தீபமே
மருவே உயர் திருவே எனக்
கருளே புரிந்திடும் (ஆ)
பாரில் படுந்தொல்லையே பார்த்திரக்கம் வல்லையா
பண்பா என தன்பா இரு
கண் பாரும் நாதரே (ஆ)

ஆழித்துரும்பென அலையுறேனித்தினம்
அகமே மகிழ் சுகமே பெற
பதமாய் வந்து ஆதரித்து (ஆ)
செம்மலே உம்கதி தேடியே யித்தகி
செப்பினேன் அப்துல் ஹமீது
இப்போதிலே (ஆ)

---

25 மெல்லிடையாள் அல்லிதனை என்ற வர்ண மெட்டு.

பல்லவி.

சாகுல் ஹமீதே நவநீதா இந்த
திகியில் வந்துத விடும் நாதா (சா)

அநுபல்லவி

தயைசெய்யவொண்ணுதா தயைசெய்யவொண்ணுதா
தமியன் மீதில் வாதா இரு
சரண பங்கய மணைதந்த தாதா (சா)

சரணம்.

ஆழக்கடலில் பெரும் தோணி பொத்து
அமுங்கி தாழும் கதி பேணி
அதைரெட்சித்தஞானி அதைரெட்சித்தஞானி
அற்பு தாயுக பாணி என்னை
யாதரித் தாளாய் நீ (சா
மகல்லதீனிற் பெரும் ஜின்னை
மணிக்கூசி லடைத்திடு மன்னனை
மகிபரையுப்முன்னே மகிபரையுப்முன்னே
மனக்குறையைச் சொன்னேன்
மகம்மது மீரான் சாகிபெனும் கண்ணே (ச
செல்வம் பொருந்திய நாகூரா வாடும்
சேடனென் முகத்தைப் பாராய்
ஜெம்மலைகயிபோரா ஜெம்மலைகயிபோரா
செய்யிதே காதிர்மீரு பத
சேவை செய்தேனெனைக்காராய் (
தாயார் வயிற்றி லுரை பேசி இந்த
தரணியில் வந்த நர கேசி
தனவந்தாவிஸ்வாசி தனவந்தாவிஸ்வாசி
தரிசனம் தந்தாசி பாடும்
தாசனப்துல் ஹமீதை நேசி (ச

முதற்பாகம் முற்றிற்று.

இதன் இரண்டாம் பாகம் அதி நூதன
வர்ண மெட்டுகளில் விரைவில் வெளிவரும்

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!

## இப்புஸ்தகம் கிடைக்குமிடம்

அ. சு. அகமதுமீரு சாகிபு,
ஷாப் வியாபாரம்,
இராமேஸ்வரம்,
இராமநாதபுரம் ஜில்லா.

---

அகுமது சாகிபு காமில் அவர்கள் இயற்றிய

# அருளானந்தப்புகழ்

## முதற்பாகம்

இராமேஸ்வரம் மேல்கண்ட விலாசதாரிடத்திலும்,

மதுரை மதுராம்பிகா பிரஸிலும் கிடைக்கும்